## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாதிலணியுடை யாதிரைநாள்
நாராயண னொடுநான்முக னங்கியிரவியு மிந்திரன்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்து நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியுமாடியும் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

| | | |
|---|---|---|
| உம்பர்தரு | தேனுமணிக் | கசிவாகி |
| ஒண்கடலிற் | தேனமுதத் | துணர்வூறி |
| இன்பரசத் | தேன்பருகிப் | பலகாலும் |
| என்றனுயிர்க் | காதரவுற் | றருள்வாயே |
| தம்பிதனக் | காதவனத் | தணைவோனே |
| தந்தை | வலத்தாலருள்கைக் | கனியோனே |
| அன்பர் | தமக்கானநிலைப் | பொருளோனே |
| ஐந்துகரத் | தானைமுகப் | பெருமாளே. |

# வட்டுக்கோட்டை கிழக்கு அருள்மிகு துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தலப்பதிகம்

பாரெலாப் துதி பெற்ற பாதவிரல் மோதிரமும்
பாடகம் தண்டை கொலுசும்
பச்சை வைடூரியமும் இச்சையாக இழைத்திட
பாதச் சிலம்பின் ஒலியும் முத்து மூக்குத்தியும்
இத்தின பதக்கமும் மோகன மாலை யழகும்

முழுதும் வைடூரியம் புஷ்பராகத்தினால் முடிந்திட்ட
தாலியழகும் சுத்தமாயிருக்கின்ற காதினில் கம்மலும்
செங்கையில் வாழும், செங்கையில் உடுக்கும்,
செங்கையில் அங்குச பாசமும், செங்கையில்
பொன் கலசமும் கொண்டு சிங்கத்தின் மீதிருந்துவந்து
எம்மையாளுவாய் ஜெகமெலாம் புகழும்
துறட்டிப்பனைப் பதியில் புகழாம் அமர்ந்திடும்
அம்மை சக்தி, ஆதிசக்தி, சிவசக்தி சொரூபினி
முத்துமாரி அம்பிகையே!

*சுபம்*

*(இப்பாடலை எல்லோரும் பாராயணம் செய்து அம்பிகையின் திருவருள் பெற்று இன்புற்றிருப்பார்களாக)*

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகம் எல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*



## அமரர்.சோமசுந்தரம் சிவபாதம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழமணித்திருநாட்டில் உள்ள யாழ்குடா நாட்டில் இயற்கை வளம் கொழிக்கும் கிராமமாகிய சித்தன்கேணியில் சோமசுந்தரம் சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனாக 28ம் நாள் ஐப்பசி மாதம் 1930ம் ஆண்டு பிறந்தார்.

அவர் தன் ஆரம்பக்கல்வியினை கல்வியினை தாவளை ஆரம்பப்பாடசாலையிலும், மேற் கல்வியினை யா/வட்டு இந்துக்கல்லூரியிலும் கற்றார். இவர் பள்ளிப்பருவத்தில் கல்வியிலும், விளையாட்டுத்துறையிலும் திறமைசாலியாக விளங்கினார்.

தனது 28வது வயதில் கிராம சேவையாளராக நியமனம் பெற்றார். அவர் தனது இல்லத்துணைவியாக சிவகாமசுந்தரியை மணந்து கொண்டார். இவர்களுக்கு புத்திரபாக்கியம் கிடைக்காவிட்டாலும் தனது சகோதர சகோதரியின் பிள்ளைகளை தன் பிள்ளைகளாக பேணி வளர்த்தார். இதனால் அவர்கள் எவ்வகை குறையுமின்றி மகிழ்வோடு வாழ்ந்தனர்.

இவர் பண்டத்தரிப்பு, அராலி, கொட்டைக்காடு, சங்கானை போன்ற இடங்களில் தனது கடமையை மிகவும் சிறப்பாக நடாத்தி மக்களின் நன்மதிப்பை பெற்றார். இவர் 1985ம் ஆண்டு கிராமசேவையாளர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். அதன்பின் தனது குல தெய்வமான துறட்டிப்பனை முத்துமாரியம்மன் கோயில் திருப்பணியில் ஈடுபட்டார். சிலகாலம் நோய்வாய்ப்பட்டு இருந்தார். அந்நேரம் அவரின் பேரப்பிள்ளைகளின் அன்பான அரவணைப்பும் பராமரிப்பும் அவருக்கு மகிழ்ச்சியை கொடுத்தது. எந்நேரமும் புன்சிரிப்புடனே காணப்படுவார். இறுதியாக 24.09.2005 சனிக்கிழமை மாலை 6.10 மணியளவில் அமைதியான அதே புன்சிரிப்புடன் இவ்வுலக வாழ்வை நீத்து இறை நிழலடைந்தார்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*குடும்பத்தினர்*

# ஆங்கிலச் சொற்களும் அதன் தமிழ் பதங்களும்

## Parts of the Body - உடலுறுப்புக்கள்

| | | | |
|---|---|---|---|
| *Head* | - தலை | *Shoulder* | - தோள் |
| *Hair* | - மயிர் | *Hand* | - கை |
| *Eye* | - கண் | *Finger* | - கைவிரல் |
| *Nose* | - மூக்கு | *Stomach* | - வயிறு |
| *Mouth* | - வாய் | *Knee* | - முழங்கால் |
| *Tooth* | - பல் | *Leg* | - கால் |
| *Lip* | - உதடு | *Toe* | - கால்விரல் |
| *Tongue* | - நாக்கு | *Nail* | - நகம் |
| *Ear* | - காது | *Foot* | - பாதம் |
| *Neck* | - கழுத்து | *Elbow* | - முழங்கை |

## Flowers பூக்கள்

| | | | |
|---|---|---|---|
| *Jasmine* | - மல்லிகைப்பூ | *Lotus* | - தாமரைப்பூ |
| *Rose* | - றோசாப்பூ | *Temple flowers* | - தேமாப்பூ |
| *Shoe flower* | - செவ்வரத்தம்பூ | *Orchid* | - ஒக்கிட் |
| *Sun flower* | - சூரியகாந்திப்பூ | *Carnation* | - கானேஷன் |
| *Anthurium* | - அந்தூரியப்பூ | *Water lily* | - நீர் அல்லி |

## Birds பறவைகள்

| | | | |
|---|---|---|---|
| *Parrot* | - கிளி | *Duck* | - வாத்து |
| *Crow* | - காகம் | *Owl* | - ஆந்தை |
| *Pigeon* | - புறா | *Woodpecker* | - மரங்கொத்தி |
| *Peacock* | - மயில் | *Penguin* | - பனிப்பறவை |
| *Hen* | - கோழி | *Kingfisher* | - மீன்கொத்தி |

